සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014 (2016)**

Limited Competitive Examination for Recruitment to Grade III of Sri Lanka Administrative Service - 2014 (2016)

**(02) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும்**

Social, Economic, Political Background of Sri Lanka and Global Trends

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✳ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாவது பக்கத்திலும் எழுதவும்**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

✳ இவ்வினாத்தாள் பகுதி I பகுதி II ஆகிய பகுதிகளையும் **6** பக்கங்களில் **40** வினாக்களையம் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுத முன்னர் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ **பகுதி I இன் எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலும் பகுதி II இன் எல்லா வினாக்களுக்கும் தரப்படுகின்ற தாள்களிலும்** விடை எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலங்கள்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 11 | |
| 3 | 12 - 24 | |
| 4 | 25 - 32 | |
| 5 | 33 - 35 | |
| 6 | 36 - 40 | |
| மொத்தம் | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

## பகுதி I

- **1** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. 2015 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படைச் சமூகக் குறிகாட்டிகளில், எதிர்காலத்தில் நாட்டினைக் கட்டியெழுப்பும் பணிக்கு (Nation-building task) மிக முக்கியத்துவம் வாய்ந்தது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   (1) பிறப்பின்போதான ஆயுள் எதிர்பார்க்கை 74.9
   (2) சராசரி எழுத்தறிவு வீதம் 93.3%
   (3) பருமட்டான பிறப்பு வீதம் 1 000 பேருக்கு 16.0
   (4) சனத்தொகையடர்த்தி சதுரகிலோமீற்றருக்கு 334 பேர் (………)

2. தற்கால இலங்கையின் பெண், ஆண் சனத்தொகைச் சதவீதத்தை சரியான ஒழுங்கில் கொண்ட விடை பின்வருவனவற்றுள் யாது?
   (1) 53.8 , 46.2 (2) 52.8 , 47.2 (3) 51.8 , 48.2 (4) 50.8 , 49.2 (………)

3. இலங்கையின், பாலுற்பத்தியில் உதவுவதற்கு, அண்மையில் முன்வந்துள்ள நாடு எது?
   (1) இந்தியா (2) டென்மார்க் (3) அவுஸ்திரேலியா (4) நியூசிலாந்து (………)

4. இலங்கையில் மலேரியா நோய் ஒழிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார தாபனத்தினால் வெளியிடப்பட்ட ஆண்டு யாது?
   (1) 2011 (2) 2012 (3) 2013 (4) 2014 (………)

5. நிறைவேற்று சனாதிபதி முறைமையின் மட்டுப்பாடற்ற அதிகாரங்கள், இலங்கைக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என முதன்முதலில் வெளிப்படுத்திய அரசியலறிஞர் பின்வருவோரில் யாராவர்?
   (1) கலாநிதி என். எம் பெரேரா (2) பேராசிரியர் ஏ.ஜே. வில்சன்
   (3) பேராசிரியர் எஸ்.யூ. கொடிகார (4) கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா (………)

6. காலனித்துவ யுகம் தொடக்கம் இந்நாட்டில் காணப்பட்ட இலங்கை சிவில் சேவை இல்லாதொழிக்கப்பட்டது எந்த வருடத்திலாகும்?
   (1) 1956 (2) 1963 (3) 1965 (4) 1972 (………)

7. இலங்கையிலுள்ள ஐந்து நீர்வீழ்ச்சிகளை அவற்றின் உயரத்திற்கேற்ப **இறங்கு வரிசைப்படி** சரியாகக் கொண்டுள்ள விடை யாது?
   (1) பம்பரகந்தை, தியலும, லக்சபான, கிரிந்தி, ஹுந்தபான்
   (2) பம்பரகந்தை, லக்சபான, தியலும, கிரிந்தி, ஹுந்தபான்
   (3) பம்பரகந்தை, லக்சபான, தியலும, ஹுந்தபான், கிரிந்தி
   (4) பம்பரகந்தை, தியலும, ஹுந்தபான், லக்சபான, கிரிந்தி (………)

8. இலங்கையில் **18** வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரசைகளுக்கும், முதன்முதலில் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எந்த ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது கிடைக்கப் பெற்றது?
   (1) 1956 (2) 1960 (3) 1965 (4) 1970 (………)

9. பின்வருவோரில் எந்த வெளிநாட்டினரால் இந்த நாட்டுக்கு கோப்பிச் செய்கை அறிமுகஞ் செய்யப்பட்டது?
   (1) அராபியர் (2) போர்த்துக்கேயர் (3) ஒல்லாந்தர் (4) ஆங்கிலேயர் (………)

10. இலக்க ஒழுங்கில் அல்லது அகராதி ஒழுங்கில் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு கணினிக்கு கட்டளையிடும் பிரயோகம் யாது?
   (1) Spam (2) Report (3) Record (4) Sort (………)

11. "மனிதன் சுதந்திரமாகவே பிறந்துள்ளான். எனினும், எல்லா இடங்களிலும் அவன் சங்கிலியினால் பிணைக்கப்பட்டுள்ளான். (man is born free, but everywhere he is in chains)" இந்தப் பிரபல்யமான கூற்றை வெளியிட்டவர் யார்?
   (1) கால் மார்க்ஸ் (2) மார்ட்டின் லூதர் கிங்
   (3) ஜீன் ஜக்ஸ் ரூசோ (4) மகாத்மா காந்தி (………)

[பக் 3 ஐப் பார்க்க.

0935

12. தற்போது உலகில் மிக அதிகளவில் தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகள் ஐந்தினை **இறங்குவரிசையில்** கொண்ட விடை யாது?
(1) சீனா, இந்தியா, கென்யா, இலங்கை, வியட்நாம்
(2) சீனா, இலங்கை, இந்தியா, கென்யா, வியட்நாம்
(3) சீனா, இந்தியா, இலங்கை, கென்யா, வியட்நாம்
(4) சீனா, கென்யா, இந்தியா, இலங்கை, வியட்நாம் (.........)

13. ட்ரபல்ஹார் சதுக்கம் அமைந்துள்ள நாடு யாது?
(1) ஐக்கிய இராசதானி (2) ரஷ்யா
(3) ஐக்கிய அமெரிக்கா (4) பிரான்ஸ் (.........)

14. சையிலொக்கின் பாத்திரத்தை எடுத்துக் காட்டும், விலியம் சேக்ஸ்பியரின் பிரபல்யமான நாடகம் பின்வருவனவற்றுள் எது?
(1) யூலிய சீசர் (2) ஹம்லற்
(3) வெனிசு நகரத்து வணிகன் (4) மக்பத் (.........)

15. கபுக்கி மற்றும் நோ எனும் மரபு நாடக மரபுகள் உருவாகிய நாடு பின்வருவனவற்றுள் எது?
(1) சீனா (2) ஜப்பான் (3) வியட்நாம் (4) தென்கொரியா (.........)

16. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள மிகவும் குளிர்ச்சியான கோள் எது?
(1) செவ்வாய் (2) சனி (3) யுரேனஸ் (4) நெப்டியுன் (.........)

17. சூழற் பாதுகாப்புத் தொடர்பான முதல் சர்வதேச சமவாயம் கருதப்படுவது பின்வருவனவற்றுள் எது?
(1) றம்சார் சமவாயம் (2) மொன்ட்ரியல் உடன்பாடு
(3) கியோட்டோ சமவாயம் (4) வியன்னா உடன்பாடு (.........)

18. பின்வருவனவற்றுள் மென் திறன் **அல்லாதது** எது?
(1) தொடர்பாடற் திறன் (2) முகாமைத்துவத் திறன்
(3) பிரச்சினை தீர்க்கும் திறன் (4) தலைமைத்துவ திறன் (.........)

19. அண்மையில் விஞ்ஞானிகளினால் நச்சுக் கழிவுகளைச் சுத்தம் செய்ய உதவும், உலோக வகைகளை உட்கொள்ளும் தாவர வகையைக் கண்டுபிடித்த நாடு யாது?
(1) கம்போடியா (2) மியன்மார் (3) பிலிப்பைன்ஸ் (4) ஜப்பான் (.........)

20. சர்வதேச ரீதியாக கீர்த்தியை ஈட்டியுள்ள "From Third World to First" எனும் நூலின் நூலாசிரியர் யார்?
(1) கலாநிதி அப்துல் கலாம் (2) நெல்சன் மண்டேலா
(3) மருத்துவர் மகதீர் முகமது (4) லீ குவான் யூ (.........)

*(01 × 20 = 20 புள்ளிகள்)*

- **21** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான **விடையை** தரப்பட்ட **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

21. தற்போது, இலங்கையின் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பவென நிறுவப்பட்டுள்ள அமைச்சு யாது?

..........................................................................................................................

22. 2016 - 2020 ஆண்டு காலப்பகுதியில் சூழல் நேய பசுமை வீர (Green Smart) கிராமங்கள் பத்தாயிரத்தை நிறுவுவதற்கான அரசின் வேலைத்திட்டம் எப் பெயர் கொண்டு அழைக்கப்படும்?

..........................................................................................................................

23. இலங்கையின் நீரியல் வள அபிவிருத்திக்கான பொறுப்பைக் கொண்டுள்ள பிரதான அரச நிறுவனம் யாது?

..........................................................................................................................

24. தற்போதைய இலங்கையின் அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தத்துக்கு அமைய நிறுவப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................................

[பக் 4 ஐப் பார்க்க.

25. இலங்கையில் பாடும் மீன்கள் உள்ளன எனக் கூறப்படும் கடல் அமைந்துள்ள இடம் யாது?

......................................................................................................................................

26. உலகில் 11 km மிக ஆழமான கடலடிப்பகுதியைக் கொண்ட இடத்தின் பெயர் யாது?

......................................................................................................................................

27. 2015 ஆம் ஆண்டில் உலகில் இலஞ்சம், மோசடி ஆகியன மிகக் **குறைவான** நாடு எது?

......................................................................................................................................

28. 2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரத்தில் நடாத்தப்பட்ட உலக பொருளாதார மாநாட்டின் கருப்பொருள் யாது?

......................................................................................................................................

29. 2016 ஆம் ஆண்டில் புவியின் மிக வேகமான மனிதர் எனப் பெயர் பெற்றவர் யார்?

......................................................................................................................................

30. வட மாகாணத்திற்குரிய நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

......................................................................................................................................

*(01 × 10 = 10 புள்ளிகள்)*

- **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான **விடையை** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

31. சேதனப் பசளைப் பயன்பாடு தொடர்பாக தற்காலத்தில் எம் நாட்டு மக்களிடையே அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளதென அறியக்கூடியதாக உள்ளது

(i) சேதனப் பசளைப் பயன்பாட்டின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டு** தருக.

(அ) ......................................................................................................................

(ஆ) ......................................................................................................................

(ii) இரசாயனப் பசளைப் பயன்பாட்டின் **பிரதிகூலமான** விளைவுகள் **இரண்டைச்** சமர்ப்பிக்க.

(அ) ......................................................................................................................

(ஆ) ......................................................................................................................

(iii) சேதனப் பசளைப் பயன்பாட்டை இந்நாட்டு மக்களிடையே பிரபல்யப்படுத்துவதற்கான ஆலோசனைகள் **இரண்டைச்** குறிப்பிடுக.

(அ) ......................................................................................................................

(ஆ) ......................................................................................................................

32. இலங்கையின் வறுமை, பல்நோக்குப் பார்வையில் ஆய்வு செய்யப்படலாம்.

(i) இந்த நாட்டின் வறுமையைக் குறைப்பதற்கு, பொருளாதாரத் துறையினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டு** தருக.

(அ) ......................................................................................................................

(ஆ) ......................................................................................................................

(ii) இந்த நாட்டிலுள்ள வறுமையைக் குறைப்பதற்கு, திறன் விருத்தித் துறை சார்ந்ததாக மேற்கொள்ள கூடிய நடவடிக்கைகள் **இரண்டு** தருக.

(அ) ......................................................................................................................

(ஆ) ......................................................................................................................

(iii) இந்த நாட்டிலுள்ள வறுமையைக் குறைப்பதற்கு, கல்வித்துறை சார்ந்ததாக மேற்கொள்ள கூடிய நடவடிக்கைகள் **இரண்டு** தருக.

(அ) ......................................................................................................................

(ஆ) ......................................................................................................................

[பக் 5 ஐப் பார்க்க.

33. தற்கால மக்கள் சமூகத்தில் மரபுரீதியான தன்மை மற்றும் நவீனத்துவம் ஆகியவற்றுக்கிடையில் போராட்டமொன்று தலைதூக்கியுள்ளதென யுனெஸ்கோ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) இலங்கையின் மக்கள் சமூகத்தில் நிலவும் பொதுவான பெறுமானங்கள் **இரண்டு** தருக.

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

(ii) இந்த நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக உள்ள மரபுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

(iii) இலங்கையர் தம்மகத்தே கொள்ள வேண்டிய நவீன இயல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

34. மானுட வர்க்கத்தின் மேம்பாட்டுக்கென விஞ்ஞானம், தொழினுட்பவியல் ஆகியன மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ள சேவை அளப்பரியதாகும்.

(i) விஞ்ஞான முறையை (Scientific method) விளக்கும் கூற்றுகள் **இரண்டு** தருக

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

(ii) அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கிரபீன் (graphene) பயன்பாட்டின் மூலம் மேற்கொள்ளத்தக்க சேவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

(iii) எதிர்காலத்தில் விஞ்ஞானம், தொழினுட்பம் ஆகியவற்றை மனிதத்துவம் மிக்கதாக ஆக்கத்தக்க ஆலோசனைகள் **இரண்டை** எழுதுக.

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

35. தற்சமயம் நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கரு, மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

(i) நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கருவை விளக்கும் வரைவிலக்கணங்கள் **இரண்டை** தருக.

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

(ii) நிலைபேறான அபிவிருத்தி எனும் எண்ணக்கரு முக்கியமாக அமையக் காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

(iii) அரச நிறுவனமொன்றில் நிலைபேறான அபிவிருத்திக்கு அனைத்து நபர்களும் பங்களிப்புச் செய்யக் கூடிய விதங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..............................................................................................................................

(ஆ) ..............................................................................................................................

*(06 × 5 = 30 புள்ளிகள்)*

[பக் 6 ஐப் பார்க்க.

## பகுதி II

- **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான **விடையை தரப்படும் தாளில்** எழுதுக.

36. இலங்கையில் மரண தண்டனை அமுல்செய்யப்பட வேண்டும் என்பதற்குச் **சார்பாகவோ** அல்லது **எதிராகவோ** விடயங்கள் **நான்கை** காரணங்களுடன் விளக்குக. *(08 புள்ளிகள்)*

37. தேசிய அபிவிருத்திக்கு நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய துறைகள் **நான்கை** ஆராய்க. *(08 புள்ளிகள்)*

38. தற்கால இலங்கையில் மக்கட் சமூகத்தில் வீழ்ச்சியடைந்தவரும் ஒழுக்கங்களை மீள நிலைநிறுத்துவதற்கென மேற்கொள்ளத்தக்க குறிப்பான பயன்தரு தன்மை கொண்ட பிரேரணைகள் **நான்கை** விளக்குக. *(08 புள்ளிகள்)*

39. மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்ட உலகில், வரையறைக்குட்பட்ட அளவில் அபிவிருத்தியை மேற்கொள்ள இயலாது. இந்த நிலைமையைக் குறைப்பதற்குத் தேவையான அபிவிருத்தி உபாய வழிகள் **நான்கை** ஆராய்க. *(08 புள்ளிகள்)*

40. தற்காலத்தில், பூகோள வெப்பமடைதல், பாரிய சூழற் பிரச்சனையாக உருவெடுத்து வருகிறது. இந்த தோற்றப்பாட்டை இழிவளவாக்குவதற்கென இலங்கையினால் மேற்கொள்ளத்தக்க பணிகளை **நான்கு** விடயங்களினூடாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

* * *

0935

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014 (2016)**

Limited Competitive Examination for Recruitment to Grade III of Sri Lanka Administrative Service - 2014 (2016)


**(03) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I**
Case study relating to Pulblic Administration I

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்**



* விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டா.

1 2 3 4

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் மற்றும் ஐந்தாம் பக்கங்களிலும் எழுதுக.**

.....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

* இவ்வினாத்தாள் I, II ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் **10** பக்கங்களில் **50** வினாக்களையும் கொண்டதாகும்.
* விடைகளை எழுத முன்னர் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.
* பகுதி I க்குரிய **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலும்** பகுதி II க்குரிய விடைகளை **தரப்படும் தாள்களிலும்** எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலம்** ஆகும்.
* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
* **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.
* **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
* இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை எடுத்தல் என்பன குற்றமாகும்.
* **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 5 | |
| 3 | 6 - 10 | |
| 4 | 11 - 15 | |
| 5 | 16 - 20 | |
| 6 | 21 - 27 | |
| 7 | 28 - 35 | |
| 8 | 36 - 40 | |
| 9 | 41 - 45 | |
| 10 | 46 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

தேசிய வீதிகள் திணைக்களத்தின் வீதிகள் பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்களைத் தயாரிக்கும்போது ஏற்பட்ட சில நிருவாகச் சிக்கல்கள் காரணமாக, தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்று, குறித்த பதவிக்குரிய நியமனக் கடிதங்களைத் தயாரித்து வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலைமை காரணமாக புதிய வீதிப் பராமரிப்பு உதவியாளர்களிற்கான நியமனம் வழங்கப்படுவதில் ஓரளவு தாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாக அவர்களுக்கு நியாயம் வழங்குவதென விநியோகிக்கப்பட உள்ள நியமனக் கடிதங்களை முற்திகதியிட்டு வழங்க வேண்டுமெனப் பலரால் கோரப்பட்டது.

இதற்கிடையில் தேசிய வீதிகள் திணைக்களத்தில் பணிபுரிந்த வீதிகள் பராமரிப்பு உதவியாளர்கள் இருவரால், புதிய நியமனங்களை வழங்குவதற்கு முன்பதாக தம்மை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு அத்திணைக்களத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் தேசிய வீதிகள் திணைக்களத்தின் வீதிப் பராமரிப்பு உதவியாளர் தொழிற் சங்கத்தினரால் தமது பதவிப் பெயர்களை வீதிப் பராமரிப்பு உத்தியோகத்தர் எனப் பெயர் மாற்றஞ் செய்யுமாறு உரிய அதிகாரிகளிடம் கோரப்பட்டது. பல வருடங்களாக விடுக்கப்படும் இந்த தொழிற் சங்கக் கோரிக்கையை இந்தத் தடவை மேற்கொள்ளவுள்ள புதிய நியமனங்களின் போதாவது செயற்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்திற்கு அமைய பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. புதிய வீதிப் பராமரிப்பு உதவியாளர்களுக்கு வழங்கப்படவுள்ள நியமனக் கடிதம் தயாரிக்கப்பட வேண்டியது தாபன விதிக் கோவையின்,
   (1) முதலாம் அத்தியாயத்துக்கமையவாகும். (2) இரண்டாம் அத்தியாயத்துக்கமையவாகும்.
   (3) மூன்றாம் அத்தியாயத்துக்கமையவாகும். (4) நான்காம் அத்தியாயத்துக்கமையவாகும். (.........)

2. புதிய வீதிப் பராமரிப்பு உதவியாளர்களக்கான நியமனக் கடிதங்களைத் தயாரிக்கும்போது ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பான, தேவையான மேலதிக அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியது,
   (1) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடமாகும்.
   (2) தாபனப் பணிப்பாளர் நாயகத்திடமாகும்.
   (3) ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமாகும்.
   (4) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமாகும். (.........)

3. வீதிப் பராமரிப்பு உதவியாளர்களின் பதவிக்குரிய பெயர்களை மாற்றியமைக்க முடிவது,
   (1) குறித்த அமைச்சின் செயலாளர், முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரது அனுமதிக்கு அமையவாகும்.
   (2) குறித்த அமைச்சின் செயலாளர், ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரது அனுமதிக்கு அமையவாகும்.
   (3) குறித்த அமைச்சின் செயலாளர், தாபனப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரது அனுமதிக்கு அமையவாகும்.
   (4) தாபனப் பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் அனுமதிக்கு அமையவாகும். (.........)

4. புதிய வீதிப் பராமரிப்பு உதவியாளர்களது நியமனத்தை முற்திகதியிட்டு வழங்குவதற்கு அனுமதி பெறப்பட வேண்டியது,
   (1) ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமாகும்.
   (2) திறைசேரியின் பிரதிச் செயலாளரிடமாகும்.
   (3) தாபனப் பணிப்பாளர் நாயகத்திடமாகும்.
   (4) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமாகும். (.........)

5. வீதிப் பராமரிப்பு உதவியாளர் இருவரினால் மீள உத்தியோகத்தில் அமர்த்துமாறு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடாக அமையத்தக்கது,
   (1) பதவியிலிருந்து விலகிச்சென்று பின்னர் மீண்டும் அப்பதவியில் நியமிக்கப்பட வேண்டும் என்பதாகும்.
   (2) பதவியை விட்டு நீங்கிய பின்னர் மீண்டும் அப்பதவியில் நியமிக்கப்பட வேண்டும் என்பதாகும்
   (3) பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற பின்னர் மீண்டும் அப்பதவியில் நியமிக்கப்பட வேண்டும் என்பதாகும்.
   (4) பதவியிலுள்ளபோதே அரச சேவையின் பிறிதொரு பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பதாகும். (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

[பக் 3 ஐப் பார்க்க.

● **6** தொடக்கம் **10** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

நகர வசதிகள் அமைச்சின் உதவிச் செயலாளர் (தாபன) ஆகிய திரு. சுனிமல் விஜேசேகர, தனது அமைச்சின் லீவுகள் தொடர்பான ஆவணங்களைப் பரிசீலனை செய்தபோது பின்வரும் விடயங்களை அறிய முடிந்தது.

※ அமைச்சிற்குரிய லீவுப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

※ முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தரான ஆகிய திரு. சிறில் குலதுங்க அவர்களால் தம்பதிவ யாத்திரைக்கெனச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிழையான லீவு விண்ணப்பப் படிவம் தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தர் தெளிவுபடுத்தப்படாமை.

※ அபிவிருத்தி உத்தியோகத்தரான ஜராங்கனி சமரதுங்கவினால், தனக்கு நிகழ்ந்த திடீர் விபத்தினால் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக சேவைக்கு சமூகமளிக்க முடியாதுள்ளது என மருத்துவச் சான்றிதழுடன் லீவு கோரப்பட்டிருந்தும் அதற்குரிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை.

※ சிரேஷ்ட திட்டமிடல் அதிகாரியான திரு. நிமல் ஹேவாவசம் அவர்களால் நிணநீர்த் தொகுதி தொடர்பான புற்றுநோய்க்கெனச் சிகிச்சை பெறுவதாக அறிவிக்கப்பட்டு அதற்கு உரிய லீவுக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்ததும் இதுவரை அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்திற்கு அமைய பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

6. நகர வசதிகள் அமைச்சிற்குரிய அனுமதிக்கப்பட்ட லீவுப் பதிவேடு பேணப்பட வேண்டியது,
   (1) பொது 190 படிவத்துக்கு அமைவாகவாகும்.
   (2) பொது 192 படிவத்துக்கு அமைவாகவாகும்.
   (3) பொது 194 படிவத்துக்கு அமைவாகவாகும்.
   (4) பொது 196 படிவத்துக்கு அமைவாகவாகும். (.........)

7. திரு. சிறில் குலதுங்கவின் பிழையான லீவு விண்ணப்படிவத்துக்குப் பதிலாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்படிவமானது,
   (1) லீவு 123 பொதுப் படிவமாகும்.
   (2) லீவு 124 பொதுப் படிவமாகும்.
   (3) லீவு 125 பொதுப் படிவமாகும்.
   (4) லீவு 126 பொதுப் படிவமாகும். (.........)

8. திருமதி ஜராங்கனி சமரதுங்க அவர்களினால் கோரப்பட்டுள்ள லீவை அனுமதிப்பதற்கென சமர்ப்பிக்கப்பட வேண்டிய மருத்துவச் சான்றிதழ்,
   (1) மருத்துவ 169 அல்லது ஆயுள்வேத 43 படிவத்துக்கு அமைவானதாகும்.
   (2) மருத்துவ 170 அல்லது ஆயுள்வேத 44 படிவத்துக்கு அமைவானதாகும்.
   (3) மருத்துவ 172 அல்லது ஆயுள்வேத 46 படிவத்துக்கு அமைவானதாகும்.
   (4) மருத்துவ 173 அல்லது ஆயுள்வேத 47 படிவத்துக்கு அமைவானதாகும். (.........)

9. தாபன விதிக்கோவைப் பிரமாணங்களுக்கு அமைய திரு. நிமல் ஹேவாவசம் அவர்களுக்கு வழங்கக்கூடிய லீவு வகை
   (1) கட்டாய லீவு
   (2) விசேட லீவு
   (3) சம்பளமற்ற விசேட லீவு
   (4) முழுமையான சம்பளத்துடன் கூடிய விசேட லீவு (.........)

10. திரு. விமல் ஹேவாவசம் என்பவருக்கு வழங்கப்படதக்க லீவின்போது ஒரு தடவையில் அனுமதிக்கக் கூடிய லீவுக் கால அளவு
   (1) 22 மாதங்களுக்கு மேற்படாத காலமாகும்.
   (2) 06 மாதங்களுக்கு மேற்படாத காலமாகும்.
   (3) 04 மாதங்களுக்கு மேற்படாத காலமாகும்.
   (4) 02 மாதங்களுக்கு மேற்படாத காலமாகும். (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

நாடாளாவிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ளோரின் சம்பளத்தைத் திருத்தியமைப்பதற்கென அரசினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைரீதியான தீர்மானத்துக்கு அமைய, அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு புதிய சம்பள அளவுத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டதுடன், அதற்கு அமைவாக அனைத்து உத்தியோகத்தர்களும், இறுதியாகப் பெற்ற சம்பளத்தை அடிப்படையாக கொண்டு அவரவர் சம்பளங்கள் திருத்தியமைக்கப்பட்டன. அபிவிருத்தி உத்தியோகத்தரான திரு. கித்சிறி பெரேராவின் சம்பளமும் இந்தப் புதிய சம்பள அளவுத் திட்டத்துக்கு அமைய திருத்தியமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்திற்கு அமைய பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

11. அபிவிருத்தி உத்தியோகத்தரின் சம்பள (வேதன) மீளாய்வுக்கு அமைய திரு. கித்சிறி பெரேராவின் சம்பளம் மாற்றியமைக்கப்பட வேண்டியது,
    (1) சம்பள மீளாய்வுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் அதிகாரியினால் குறிப்பிடப்படும் திகதியிலிருந்தாகும்.
    (2) சம்பள மீளாய்வு நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்தாகும்.
    (3) சம்பள மீளாய்வு மேற்கொள்ளப்படும் வருடத்தின் சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்தாகும்.
    (4) சம்பள மீளாய்வு அனுமதிக்கப்பட்ட பின்னர் அடுத்து வரும் மாதத்திலிருந்தாகும். (.........)

12. சம்பள மீளாய்வுக்கு அமைய, திரு. கித்சிறி பெரேரா இறுதி மாதத்தில் பெற்ற சம்பளம், புதிய சம்பள அளவுத்திட்டத்தின் குறித்தவொரு சம்பளப் படிமுறையில் வைக்கப்பட்டதெனின் அவரது சம்பளம் புதிய சம்பள அளவுத் திட்டத்தின்,
    (1) ஆரம்பப் படிமுறையில் வைக்கப்பட வேண்டும்.
    (2) அதற்கு ஒப்பான படிமுறையில் வைக்கப்பட வேண்டும்.
    (3) அதற்கு ஒப்பான படிமுறைக்கு அண்மித்த அடுத்த படிமுறையில் வைக்கப்பட வேண்டும்.
    (4) இறுதிப் படிமுறையில் வைக்கப்பட வேண்டும். (.........)

13. சம்பள மீளாய்வின் பின்னர் திரு. கித்சிறி பெரேராவின் அடுத்த சம்பள ஏற்றத் திகதியாகக் கருதப்படுவது,
    (1) சம்பள மீளாய்விற்குரிய வருடத்தின் சனவரி முதலாம் திகதியாகும்.
    (2) முதல் நியமனத் திகதியாகும்.
    (3) சம்பள மீளாய்வு செயற்படும் திகதியாகும்.
    (4) மீளாய்வு செய்யப்படும் சம்பளம் முதற் தடவையாக வழங்கப்படும் திகதியாகும். (.........)

14. சம்பள மீளாய்விற்கமைய திரு. கித்சிறி பெரேரா இறுதியாகப் பெற்ற சம்பளம், புதிய சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்பச் சம்பளத்தை விடக் குறைவாயின், அவரது சம்பளம் புதிய அளவுத் திட்டத்தின்
    (1) ஆரம்பப் படிமுறையில் வைக்கப்பட வேண்டும்
    (2) இரண்டாம் படிமுறையால் வைக்கப்பட வேண்டும்
    (3) நான்காம் படிமுறையால் வைக்கப்பட வேண்டும்
    (4) இறுதிப் படிமுறையால் வைக்கப்பட வேண்டும் (.........)

15. சம்பள மீளாய்வுக்கு அமைய, கித்சிறி பெரேராவினால் இறுதியாகப் பெறப்பட்ட சம்பளமாகக் கருதப்படுவது, அந்தச் சம்பள மீளாய்வு,
    (1) அறிவிக்கப்பட்டபோது பெற்றுக் கொண்டிருந்த சம்பளமாகும்.
    (2) நடைமுறைப்படுத்திய திகதிக்கு அண்மித்த முந்திய நாளில் பெற்ற சம்பளமாகும்.
    (3) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் திகதிக்கு அண்மித்த முந்திய நாளில் பெற்ற சம்பளமாகும்.
    (4) நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்குரிய வருடத்தின் சனவரி 31 ஆம் திகதி பெறப்பட்ட சம்பளமாகும். (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

● **16** தொடக்கம் **20** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

உள்நாட்டு அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியன பற்றி குறித்த அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வில் அவற்றின் அதே பொருட்கள் காணாமல் போதல், பாதிப்புகள் ஆகியவற்றின்போது நிதி ஒழுங்குகளுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. நிதி ஒழுங்கு பற்றிய மிகக் குறைவான அறிவே அதிகாரிகளிடம் உள்ளமையும் கவனமின்றிச் செயற்படுகின்றமையுமே இந்த நிலைமைக்குக் காரணமென கணக்காய்வு அதிகாரிகளினால் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இவ்வாறான நிலைமையில் கீழ் பொருட்கள் காணாமல் போதல் மற்றும் பாதிப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குகளுக்கு அமைய எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் சிலவற்றை வலியுறுத்தி, அறிவுறுத்தல் கடிதமொன்றை அமைச்சின் கீழ் உள்ள சகல நிறுவனத் தலைவர்களுக்கும் சமர்ப்பிக்க அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்திற்கு அமைய பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

16. உள்நாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கை **மேற்கொள்ளப்படாத** வகையாக அமைவது,
    (1) அரசின் நிலையான சொத்துக்களின் தேய்மானம்
    (2) அரசின் வர்த்தக முயற்சிகளில் வெளிக்காட்டப்படும் வருட இறுதிச் சந்தை நட்டம்
    (3) குளக்கட்டு, மதகு, பாலம் போன்றவற்றுக்கு வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்பு
    (4) அரச சொத்துக்களாக அமையாததும் அரசின் பொறுப்பிலுள்ள நிதிப் பெறுமானம் கொண்டதுமான சொத்துக்கள் காணாமல் போதல் (.........)

17. உள்நாட்டு அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனமொன்றில் காணாமல்போதல், சேதமடைதல் தொடர்பான ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக முதனிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படுவது, அவ்வாறு செய்ய வேண்டியது பாதிப்புகள் தொடர்பாக முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு
    (1) ஒரு நாளுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால் மட்டுமாகும்.
    (2) இரண்டு நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால் மட்டுமாகும்.
    (3) ஐந்து நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால் மட்டுமாகும்.
    (4) ஏழு நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால் மட்டுமாகும். (.........)

18. உள்நாட்டு அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள திணைக்களமொன்றில் நிகழ்ந்துள்ள இழப்புகள் தொடர்பான முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியது, அந்த இழப்புகள் நிகழ்ந்து
    (1) மூன்று மாதங்களிற்குள்ளாகும். (2) ஆறு மாதங்களிற்குள்ளாகும்.
    (3) ஒன்பது மாதங்களிற்குள்ளாகும். (4) ஒரு வருடத்திற்குள்ளாகும். (.........)

19. நி.ஒ. 108 க்கு அமைவாக, உள்நாட்டு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மூலம் அனுப்பப்படும் அறிவுறுத்தற் கடிதத்தில், ஏற்பட்ட இழப்புகள் தொடர்பாக செயற்படும் அதிகாரியாகக் குறிப்பிடத்தக்க அலுவலர்
    (1) பிரதேச செயலாளர் (2) பிரதம கணக்காளர்
    (3) கணக்கீட்டு உத்தியோகத்தர் (4) கணக்காய்வாளர் நாயகம் (.........)

20. உள்நாட்டு அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள திணைக்களமொன்றில் நிகழ்ந்த இழப்புத் தொடர்பாக நடவடிக்கையெடுப்பதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அதிகாரம் இல்லாத சந்தர்ப்பத்தில் அதற்கான இழப்பிற்கான பணிப்புப் பெறப்பட வேண்டியது,
    (1) குறித்த துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடமிருந்தாகும்
    (2) திறைசேரிப் பிரதிச் செயலாளரிடமிருந்தாகும்.
    (3) கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்தாகும்.
    (4) கணக்காய்வு அத்தியட்சகரிடமிருந்தாகும். (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

[பக் 6 ஐப் பார்க்க.

● **21** தொடக்கம் **30** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாக கொண்டவையாகும்.

கிராம அபிவிருத்திக்கென அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு செயற்றிட்டங்கள்/நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை கிராம மட்டத்தில் அமுல்செய்வதற்கான பொறுப்பு கிராம சேவைகள் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. கிராம சேவைகள் பணிப்பாளர், இந்தத் திணைக்களத்தின் தலைவராகவும் அரச சேவைகள் ஆணைக்குழு மூலமாக நிதி அதிகாரத்துடன் கூடியதாக நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகவும் விளங்குகிறார். 2015.01.01 அன்றிலிருந்து கிராம சேவைகள் பணிப்பாளராக புதிதாக நியமனம் பெற்று வந்த திரு. உபுல் ரன்தெனிய தனது திணைக்களத்தின் நிருவாகப் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தினார். இதன்போது திணைக்களத்தில் அதிகாரிகளாக சேவைபுரியும் கிராமிய சேவைகள் அதிகாரிகள் நானூறுக்கும் அதிகமானோர், முறையான இடமாற்றச் செயன்முறை அமுல்செய்யப்படாததன் காரணமாக பல வருடங்களாக ஒரே சேவை நிலையத்தில் சேவைபுரிவது தெரியவந்தது. இந்த நிலைமை, திணைக்கள நிருவாக நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளின் திருப்திகரமான சேவையைப் பெறுவதில் சிக்கலாக அமைவதனால் 2016 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் அனைத்து கிராமிய சேவைகள் அதிகாரிகளுக்கும் நியம முறைக்கமைவாக இடமாற்றங்களை மேற்கொள்வதற்கென 2015 ஆம் ஆண்டுக்கான இடமாற்றக் குழுவை அமைத்து மேலதிக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்திற்கு அமைய பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான சரியான **விடையைத்** தரப்பட்ட **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

21. கிராம சேவைகள் திணைக்களப் பணிப்பாளரினால் தனது திணைக்கள அதிகாரிகளுக்கென நியம முறையிலான இடமாற்ற முறைமை அறிமுஞ்செய்யப்பட்டதன் **ஒரு** நோக்கத்தைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

22. கிராம சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்றக்குழு மூலமாக இடமாற்றக் கொள்கை மற்றும் திட்டம் ஆகியன தயாரிக்கப்படும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய **ஒரு** விடயத்தைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

23. கிராம சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்றக் குழு எந்தத் திகதிக்கு முன்பதாக நிறுவப்பட வேண்டும்?

.................................................................................................................................

24. இடமாற்றம் தொடர்பாக கிராம சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்றக் குழுவின் விடயப் பரப்பினுள் **அடங்காத ஒரு** விடயத்தைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

25. கிராம சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்றக் குழுவில் தொழிற்சங்கங்களின் மூலம் பிரதிநிதிகளை பெயரிடுவதற்காக வருடாந்த இடமாற்ற விடயப்பரப்பினுள் அடங்கும் உத்தியோகத்தர்களில் **குறைந்தது** எத்தனை சதவீதத்தினர் உரிய தொழிற்சங்கத்தினால் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்?

.................................................................................................................................

26. கிராம சேவைகள் திணைக்களப் பணிப்பாளருக்குக் கிடைக்கப்பெற்ற வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்கள் எந்தத் திகதிக்கு முன்பதாக வருடாந்த இடமாற்றக் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்?

.................................................................................................................................

27. வருடாந்த இடமாற்றக் குழுவினால் தமது இடமாற்றப் பிரேரணைகள், எந்த திகதிக்கு முன்பதாக கிராம சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்?

.................................................................................................................................

[பக் 7 ஐப் பார்க்க.

28. வருடாந்த இடமாற்றப் பிரேரணைகள் கிடைக்கப் பெற்றவுடன், கிராம சேவைகள் பணிப்பாளரின் மூலமாக உத்தேச வருடாந்த இடமாற்றங்கள் பற்றிய அறிவித்தல் எந்தத் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும்?

.....................................................................................................................................

29. வருடாந்த இடமாற்ற அறிவுறுத்தலின் மூலமாக அதிருப்தியடையும் உத்தியோகத்தர்களினால், கிராம சேவைகள் பணிப்பாளருக்கு விடயங்களை முன்வைக்கப்பட வேண்டியது விடுமுறை நாட்கள் அடங்கலாக உச்சமாக எத்தனை நாட்களுக்கு முன்னதாக அறிவிக்கப்பட வேண்டும்?

.....................................................................................................................................

30. வருடாந்த இடமாற்ற அறிக்கையினால் அதிருப்தியடையும் அதிகாரி ஒருவரினால் கிராம சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டியது, தாபன விதிக் கோவையின் எந்த அத்தியாயத்தின் கீழாகும்?

.....................................................................................................................................

*(01 × 10 = 10 புள்ளிகள்)*

● **31** தொடக்கம் **35** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

> வருடாந்த செலவின மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை, அரச நிதி ஒழுங்குவிதிகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, சகல அரச அமைச்சுகள், திணைக்களங்கள் ஆகியன மூலமாக எதிர்வரும் வருடத்துக்கான வருடாந்த வருமான, செலவின நகல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்துக்கு அமைய பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான சரியான **விடையைத்** தரப்பட்ட **புள்ளிக்கோட்டில் சுருக்கமாக** எழுதுக.

31. அரச செலவினங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ள **இரண்டு** வகுதிகளும் யாவை?

(i) .....................................................................................................................................

(ii) .....................................................................................................................................

32. முற்பணக் கணக்கு வகைகள் **இரண்டு** தருக.

(i) .....................................................................................................................................

(ii) .....................................................................................................................................

33. முற்பணக் கணக்கு தொடர்பான மதிப்பீடுகளின் எல்லைகள் **இரண்டைத்** தருக.

(i) .....................................................................................................................................

(ii) .....................................................................................................................................

34. முற்பணக் கணக்கு மதிப்பீடு தவிர அடுத்துவரும் நிதியாண்டுக்கான அரச அமைச்சு அல்லது திணைக்களத்தின் மூலமாகத் தயாரிக்கப்படும் வருமான, செலவு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படும் வேறு மதிப்பீட்டு வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) .....................................................................................................................................

(ii) .....................................................................................................................................

35. (i) அமைச்சரவையின் அனுமதியின் பின்னர் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் மதிப்பீட்டு வரைபு எப்பெயரினால் அழைக்கப்படும்?

.....................................................................................................................................

(ii) இந்த வரைபு சட்டமாக மாறுவதற்கு, சபாநாயகரினால் கையொப்பமிடப்பட்ட பின்னர் எப்பெயரினால் அழைக்கப்படும்?

.....................................................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

[பக் 8 ஐப் பார்க்க.

● **36** தொடக்கம் **40** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு திகதி குறிக்கப்பட்ட காலப்பகுதியே இதுவாகும். இந்தக் காலப் பகுதியினுள் மாவட்ட அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு கிடைக்கபெற்ற முறைப்பாட்டில், அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்தல்லாத அமைச்சின் பதவிநிலை அதிகாரிகள் சிலர் தேர்தல் அபேட்சகரின் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்த அரச அமைச்சொன்றின் கீழுள்ள திணைக்களத்தில் சேவையாற்றும் அரசியல் உரிமைகளை அனுபவிக்கும் தகுதியைக் கொண்ட கள அலுவலர்கள் சிலரும் அந்த உரிமைகளை அனுபவிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளை மீறி நடந்து கொள்கின்றனர் எனவும் குறித்த முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கிடையில், அரசில் பதிவு செய்துள்ள தொழிற்சங்கமான மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தில் 3425 அங்கத்தவர்கள் உள்ளதாகவும் அந்தத் தொழிற்சங்கத்தின் பிரதம செயலாளரான திரு பட்றிக் புஞ்சிஹேவா அவர்களை முழுமையாக தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கென விடுவிக்கும் படியான கோரிக்கையும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடம் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்துக்கு அமைவாக பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான சரியான **விடையைத்** தரப்பட்ட **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

36. மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கத்திலுள்ள அங்கத்தவரின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு, அந்தத் தொழிற்சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கென முழுமையாக உத்தியோகத்தரொருவரை விடுவிக்கத்தக்க சந்தர்ப்பங்கள் **இரண்டைத்** தருக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

37. திரு பட்றிக் புஞ்சிஹேவா அவர்களை முழுமையாகத் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கென விடுவிப்பதெனின், இந்த உத்தியோகத்தரின் சம்பளத்தை வழங்குவது தொடர்பாக, தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

38. மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் அலுவலர்களை மாற்றும்போது, தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்ட அனுசரணையைப் பெறுவதற்கு குறித்த சங்கத்தினால் உரிய அதிகாரம் கொண்டவருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணபத்தில் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள் **இரண்டை** எழுதுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

39. அரசியல் உரிமைகளை அனுபவிக்கத் **தகுதியற்ற** அதிகாரியொருவருக்கு, தடை செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

40. அரசியல் உரிமைகளைக் கொண்ட உத்தியோகத்தரொருவர் அந்த உரிமைகளை அனுபவிக்கும் போது கைக்கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகள் **இரண்டு** தருக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

[பக் 9 ஐப் பார்க்க.

● **41**தொடக்கம் **45** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

சுயவிபர நற்சான்றுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திரு லலித் வணிகரத்ன அவர்கள், தனது பதவியைப் பொறுப்பேற்ற பின்னர், திணைக்களத்தின் சகல பிரிவுகள் தொடர்பாகவும் கணக்காய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி தனது திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளருக்கு வேண்டுகோள் விடுத்தார். அதற்கமைய உரிய துறைகள் தொடர்பாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளகக் கணக்காய்வாளரால் திரு லலித் வணிகரத்னவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையில், பின்வரும் நிருவாகக் குறைப்பாடுகள் பணிப்பாளரின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

- ❊ கொடுப்பனவுகளின்போது குறித்த பொது மாதிரிப் படிவங்கள் பயன்படுத்தப்பட்டிராமை.
- ❊ விசேட சந்தர்ப்பங்களுக்கான கொடுப்பனவுகளின்போது பெறப்பட வேண்டிய வாழ்க்கைச் சான்றிதழ் பெறப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.
- ❊ உத்தியோகபூர்வ கடித தொடர்புகளின் போது குறித்த விதிகள் கவனத்திற் கொள்ளப்படாமை.
- ❊ திணைக்களத்தில் பொதுமக்களுடன் அடிக்கடி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் அலுவலர் 'பொதுவான நடத்தைகள்' பற்றிக் கருத்திற் கொள்ளாது நடந்து கொள்ளல்.
- ❊ சுயவிபர நற்சான்றிதழ் வழங்குவதற்கென பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பணம் சிறாப்பரினால் தனிப்பட்ட கருமங்களுக்கெனப் பயன்படுத்தப்பட்டிருத்தல்.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்துக்கு அமைய பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான சரியான **விடையைத்** தரப்பட்ட **புள்ளிக்கோட்டில் சுருக்கமாக** எழுதுக.

41. சுயவிபர நற்சான்றிதழ் திணைக்களத்தினால் பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்போது பயன்படுத்தப்பட வேண்டிய பொது மாதிரிப் படிவத்தின் இலக்கத்தைக் குறிப்பிடுக.

(i) வைப்புகளிலிருந்தான கொடுப்பனவு :.................................................................

(ii) மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு :.........................................................

42. சுயவிபர நற்சான்றிதழ் திணைக்களத்தினால் நி.ஒ 290 க்கு அமைவாகக் கொடுப்பனவை மேற்கொள்ள முன்பதாக, உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) .........................................................................................................

43. சுயவிபர நற்சான்றிதழ் திணைக்கள உத்தியோகத்தர்களால் உத்தியோகபூர்வ கடிதத் தொடர்புகளின் போது கைக்கொள்ளப்பட வேண்டிய விதிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) .........................................................................................................

44. சுயவிபர நற்சான்றிதழ் திணைக்களத்தில் பொதுமக்களுடன் அடிக்கடி கருமமாற்றும் அரச அலுவலரொருவர் பொது நடத்தைகளின்போது கைக்கொள்ளவேண்டிய விடயங்கள் **இரண்டு** தருக.

(i) ..........................................................................................................

(ii) .........................................................................................................

45. சுயவிபர நற்சான்றிதழை வழங்குவதற்கென பொதுமக்களிடத்தில் பெற்றுக்கொள்ளப்படும் பணம் சிறாப்பரினால் தனிப்பட்ட கருமங்களுக்கெனப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக ஏற்புடையதாக அமையும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) .........................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

[பக் 10 ஐப் பார்க்க.

## பகுதி II

● **46** தொடக்கம் **50** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

கணக்காய்வாளர் நாயகததின் திணைக்களத்தினால் சுற்றாடல் காப்பு அமைச்சு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது அந்த அமைச்சின் களஞ்சியத்தில் நீண்ட காலமாக நடைபெறும் முறைகேடுகள் பற்றிக் கண்டறியப்பட்டது. களஞ்சியத்தில் பொருட்கள் காணாமற் போதல், இருப்புப் புத்தகம் சமப்படுத்தப்படாமை, களஞ்சியப் பதிவேடுகள் சரியாகப் பேணப்படாமை, அந்த ஆவணங்கள் சரியாக இற்றைப்படுத்தபடாமை ஆகியன இந்த கணக்காய்வின்போது தெளிவாக அவதானிக்கப்பட்டன. இதற்கமைய இந்தக் களஞ்சியத்தில் ஏற்பட்ட முறைகேடுகள் குறிப்பிடப்பட்டு கணக்காய்வு அதிகாரியினால் சுற்றாடல் காப்பு அமைச்சின் செயலாளருக்கு கணக்காய்வு அறிக்கையொன்று உடனடியாக சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு / சந்தர்ப்பத்திற்கு அமைய பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான **விடைகளைத் தரப்படும் தாள்களில்** எழுதுக.

46. சுற்றாடல் காப்பு அமைச்சுத் தொடர்பாக, கணக்காய்வு அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாக ஒழுக்காற்று அதிகாரி என்ற வகையில் அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

47. சுற்றாடல் காப்பு அமைச்சின் களஞ்சியத்தில் ஏற்பட்டுள்ள கணக்காய்வின்போது, ஏற்பட்டுள்ள இழப்புகள் தொடர்பாக நி.ஒ. 104 (4) இன் கீழ் பூரண விசாரணையை மேற்கொள்ள அந்தத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருக்கு (நிருவாக) பொறுப்பளிக்கப்பட்டது. அந்த உதவிப் பணிப்பாளர், (நிருவாகம்) நீரெனக் கொண்டு விசாரணையின் முடிவில் உமது பூரண அறிக்கையில் நி.ஒ 104 (4) இற்கு அமைய உள்ளடக்க வேண்டிய விடயங்கள் எவையெனக் குறிப்பிடுக. *(08 புள்ளிகள்)*

48. முதற்கட்ட விசாரைணயின் பின்னர் சுற்றாடல் காப்புத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நியம ஒழுக்காற்று விசாரணையின் போது முறைப்பாட்டை வழிப்படுத்தும் பொறுப்பு உதவிப் பணிப்பாளர் (தாபன) அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. இதற்கமைய முறைப்பாட்டை வழிப்படுத்தும் அலுவலர் என்ற வகையில் உதவிப் பணிப்பாளரின் (தாபன) பொறுப்பு மற்றும் பணிகளை விளக்குக. *(08 புள்ளிகள்)*

49. நியம முறையிலமைந்த ஒழுக்காற்று விசாரைணயின் பின்னர் களஞ்சியப் பொறுப்பாளருக்கு வழங்கப்படும் ஒழுக்காற்றுக் கட்டளையில் கட்டாயமாக அடங்கியிருக்க வேண்டிய விடயங்கள் யாவை? *(08 புள்ளிகள்)*

50. ஒழுக்காற்றுக் கட்டளைகள் தொடர்பாக களஞ்சியப் பொறுப்பாளரினால் மேன்முறையீடு செய்யப்படுமெனில், அதற்கென தாபன விதிக் கோவையில் உள்ள ஏற்பாடுகள் எவையென விளக்குக. *(08 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது.]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் /
Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2014 (2016)**

Limited Competitive Examination for Recruitment to Grade III of Sri Lanka Administrative Service - 2014 (2016)

**(04) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II**
Case Study relating to Pulblic Administration II

| வினா இலக்கம் | புள்ளிகள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 (i) | |
| 4 (ii) | |
| 4 (iii) | |
| மொத்தம் | |
| விடைத்தாள் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பதிந்தவர் | |

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

● **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

**சுட்டெண் :** ..........................

**1.** பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து பகுப்பாய்வுரீதியாகவும் தர்க்கரீதியாகவும் விடயங்களை முன்வைத்து **250-300** சொற்களைக் கொண்ட கட்டுரையொன்று எழுதுக.

(i) நாட்டின் அரசியல்துறை, நிருவாகப் பொறிமுறை ஆகியவற்றில் ஏற்படும் நவீனமயப்படுத்தல்களுக்கு இசைவாக நிருவாக அதிகாரியானவர் நடந்துகொள்ளும்போது எதிர்கொள்ள நேரிடும் சவால்களை வெற்றிகொள்ளல்.

(ii) உலகம் முழுவதும் பரவிவரும் பயங்கரவாத நடவடிக்கைகளினால் நாளாந்தம் அதிகரிக்கும் மனிதப் படுகொலைகளை தடுத்து நிறுத்தல்

(iii) தனியார் மயப்படுத்தலினாலும் சர்வதேச மயப்படுத்தலினாலும் நாடொன்றின் அரசக் கட்டுப்பாட்டிலுள்ள கல்வியின் தரத்திலும் நம்பகத் தன்மையிலும் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தீர்த்தல்

(iv) தொழிலின்மை, கீழுழைப்பு ஆகிய பிரச்சினைகள் காரணமாக இளைய தலைமுறையினரிடம் ஏற்படக்கூடிய விரக்திநிலை

(v) பல்வேறு வகைப்பட்ட இரசாயனப் பசளைகளுக்குப் பதிலாக சேதனப் பசளைகளை மட்டும் பயன்படுத்துவதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள்

(vi) இனம், சமயம்சார் கருத்துக்களின் அடிப்படையிலான அரசியல் கட்சிகள் காரணமாக நாட்டில் பொதுமக்கள் நலன்புரி சேவைகளை வழங்கும்போது ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள்

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

[பக் 2 ஐப் பார்க்க.

(30 புள்ளிகள்)

[பக் 3 ஐப் பார்க்க.

2. பின்வரும் பந்தியை வாசித்து அதன் சாராம்சத்தை **மூன்றிலொன்றாகச் சுருக்கி** எழுதி பொருத்தமான **தலைப்பினையும்** இடுக. இறுதியில் பயன்படுத்திய **சொற்களின் எண்ணிக்கையைக்** குறிப்பிடுக.

நலத்துறை நிறுவனங்களின் வலையமைப்பு பரவலாகக் காணப்பட்ட போதும் சிறப்பியல்பு வாய்ந்த வைத்தியசாலைகள் மற்றும் சிறப்பியல்பு அற்ற ஆரம்ப நலக் கவனிப்பு நிறுவனங்களின் வகிபாகங்களிடையே தெளிவான வரையறையொன்று போதியளவில் காணப்படாமையானது நலக் கவனிப்பு முறையைப் பொதுவாகப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு தடங்கலாக விளங்குகிறது. நலச் சிகிச்சையை எதிர்பார்க்கும் நோயாளர்களுக்கு எந்தவொரு நல நிறுவனத்திலும் அல்லது அலுவலகத்திலும் பதிவு செய்யாமல் எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் தேவையான நலக் கவனிப்பினை பெற்றுக் கொள்வதற்கான சுதந்திரம் வழங்கப்படுகிறது. இது உள்ளூர் அரச நல மருத்துவ தாதி அல்லது நல அமைச்சு அலுவலகத்தில் அவசியம் பதிவு செய்ய வேண்டிய நோய்த் தடுப்பு அல்லது சனசமூக நலப் பணி நோயாளர்களுக்கு மாறானதாகும். ஆரம்ப நலக் கவனிப்பு நிறுவனங்களுக்கு செல்லாமல் சிறப்பு மருத்துவ நிறுவனங்களுக்குச் செல்வது இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றிலிலுமிருந்து எதிர்பார்க்கப்படும் நலத்துறைப் பெறுபேறுகளின் காத்திரமான தன்மையினைக் குறைத்து வருகிறது. இதன் காரணமாக கொத்தணி முறையொன்றினை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி சிறப்பு வைத்தியர்களைக் கொண்ட வைத்தியசாலைகள் (ஆதார வைத்தியசாலைகளும் அதற்கு மேற்பட்டவையும்) பரிந்துரைகள் மற்றும் பின்பரிந்துரைகளுக்காக அப்பகுதியிலுள்ள ஆரம்பமட்ட நிறுவனங்களுடன் இணைக்கப்படும். தொடர்ச்சியான நலக் கவனிப்புக் கிடைப்பதை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், சிக்கலான தன்மைகள் உருவாகுவதனைத் தடுப்பதற்காக, கடுமையான சூழ்நிலைகளிலும் கிரமமான அடிப்படையிலும் ஆரம்பத்திலேயே நோய்களை இனங்காண்பதற்காக சிறப்பு வைத்திய நிலையங்களுக்கு நோயாளர்கள் அனுப்பப்படுகின்றனர். அத்தகைய முறையானது சிறப்பு மருத்துவரைக் கொண்ட வைத்திய சாலைகள் மீதான சுமையினைக் குறைப்பதுடன் அத்தகைய சிறப்பு மருத்துவர்கள் அவசர மருத்துவ உதவிகள் தேவைப்படுகின்ற நோயாளர்கள் மீதும் நேரகாலத்துடன் நோய்களை இனங்காண்பதனை உறுதிப்படுத்துவதற்காக நோய்த்தடுப்பு பரிந்துரைகளைக் கொண்டிருப்பவர்கள் மீதும் கவனத்தினைச் செலுத்த முடியும். இது வளங்களைச் சேமித்து ஆராய்ச்சி போன்ற முக்கிய துறைகளுக்கு செயற்றிறனான ஒதுக்கலை இயலச் செய்யும்.

*(25 புள்ளிகள்)*

[பக் 4 ஐப் பார்க்க.

**3.** பின்வரும் பந்திகளை வாசித்து ஒவ்வொரு பந்தியினதும் பிரதான கருத்தைச் சுருக்கமாக **ஒரு வாக்கியத்தில்** எழுதுக. **தடித்த எழுத்தில்** எழுதப்பட்டுள்ள சொற்றொடர்களை விளக்குக.

(i) பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் போன்ற புராதன அரசியல் சிந்தனையாளர்கள் நல்லாட்சி நிலவ இம்மூன்று அதிகாரங்களும் தனித்தனியான நிறுவனங்களால் வெவ்வேறாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர். இந்தக் கருத்தைப் பிரான்ஸ் நாட்டு சட்ட எழுத்தாளரான மென்டெஸ்கியு என்பவர் விரிவுபடுத்தி வலுவேறாக்கம் என்ற கொள்கையை வகுத்தார். அவருடைய கருத்துப்படி அரசின் பிரதான மூன்று அதிகாரங்களும் தனித்தனியாக பிரயோகிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அதிகார துஷ்பிரயோகத்தை தடுக்கவும் **தனிநபர் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் முடியும்**. இம்மூன்று அதிகாரங்களும் ஒன்றின் மீதொன்று தங்கியிராத வகையில் அமுல் செய்யப்பட வேண்டும். இம்மூன்று அதிகாரங்களும் ஒரே நபரிடத்தில் அல்லது நிறுவனத்தில் இருக்குமானால் அது சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லலாம். ஏனெனில் அங்கு அதிகாரங்கள் முறையாகக் கையாளப்படுவதை உறுதிப்படுத்த எந்த வழிவகைகளும் இல்லை.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(ii) வெளிநாட்டைச் சேர்ந்த பணியாளர்களின் குடிவரவு, இலங்கையின் தொழிற்சந்தையில் அண்மைக்காலப் போக்காகக் காணப்படுகிறது. இது தொழிற்சாலையில் கூலி அழுத்தத்தைத் தணிக்கும் அதேவேளை புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து பரந்துபட்ட அறிவு மற்றும் தொழினுட்ப **வாய்ப்புக்களை வழங்குவதில் வரவேற்கத்தக்க போக்காகும்**. எனினும், கீழ்நோக்கிய இடர்நேர்வு என்னவெனில் தொழிலாளர் புலம்பெயர்வானது தொழிலின்மை மீது மேல் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(iii) ஆயுதங்கள் பரவுதலை நிறுத்துதலும் பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தும் ஆயுதங்களைக் குறைத்து இறுதியாக இல்லாதொழிப்பதும் ஐக்கிய நாடுகளின் பாரிய குறிக்கோள்கள் ஆகும். ஐக்கிய நாடுகள் ஆயுதக்குறைப்புப் பேச்சுவார்த்தையை செய்து கொண்டிருக்கும் மன்றமொன்றாகச் சிபாரிசுகளைச் செய்து கொண்டிருப்பதுடன் கற்கைகளையும் ஆரம்பித்திருக்கின்றது. ஐக்கிய நாடுகள் ஆயுதபலக் குறைப்பு மீதான மகாநாட்டிலும் ஏனைய சர்வதேச அமைப்புக்களிலும் பல்தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு இம் மன்றம் ஆதரவளிக்கின்றது. இந்தப் பேச்சுவார்த்தைகள் **அணுப் பெருக்கம் சாரா பொருத்தனை** பரந்த அணுப்பரிசோதனைத் தடைப் பொருத்தனை அணு அல்லாத வலயங்களைத் தாபிக்கின்ற பொருத்தனைகள் போன்ற உடன்படிக்கைகளை உருவாக்கியுள்ளன.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

*(05 × 3 = 15 புள்ளிகள்)*

[பக் 5 ஐப் பார்க்க.

**4.** பின்வரும் பந்திகளை வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **சுருக்கமாக விடைகளை** எழுதுக.

(i) நிரந்தரமான பதவிகளுக்கான நியமிப்புக்களெல்லாம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகூர் நிலையில் இருக்கும். நியமிப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர் தனது நியமிப்பிலே விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதுடன் அரச சேவையில் தன்னைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கான தனது தகுதியை நடத்தையாலும் திறமையான சேவையாலும் நிரூபிப்பின் அவர் தனது சேவையில் உறுதிப்படுமுன்பு தான் நிரந்தரமான ஓர் உத்தியோகத்தில் சேர்க்கப்படும் நிலையில் உள்ளார் என்பதைக் கணக்கிற் கொள்ளலாம் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துவதே தகுதிகூர் நிலை கொண்ட நியமிப்பாகும். தகுதிகூர் நிலையில் நியமிப்புச் செய்வதன் நோக்கம் திட்டான கெட்ட நடத்தை உள்ளவர் நீக்கப்படுதலை இலகுவாக்குவதும் மனோநிலைக் குறைபாடும் பிற குறைபாடும் உள்ளவர் அரச சேவையிலிருந்து விடுவிக்கப்படுவதுமாகும். அப்போதுதான் அவர்கள் காலம் தாழாது வேறு உத்தியோகம் தேட முடியும். அவர்கள் தமது கடமைகளில் அனுபவத்தைப் பெறுவதற்கான சகல வசதிகளும் அவர்களுக்கு அளிக்கப்படல் வேண்டும். அத்துடன் அவர்களைத் தொடர்ச்சியான கருணைவாய்ந்த அவதானிப்பின் கீழ் வைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு வழிகாட்டலும் வேண்டும். ஓர் உத்தியோகத்தர் தனது தகுதிகூர் காலத்தில் நிரந்தரமாகத் தன்னை வைத்திருப்பதற்கான தனது தகவு பற்றி ஐயம் ஏற்படக்கூடிய சார்புகள் ஏதேனும் காட்டுவாரானால் அவர் உடனே எச்சரிக்கப்படல் வேண்டும். அத்துடன் அவர் தனது தவறுகளைத் திருத்தக்கூடிய அத்தகைய உதவியையும் அவருக்கு அறிவித்தல் வேண்டும். அந்த உத்தியோகத்தர் அவரது தவறுகளுக்காக எச்சரிக்கப்பட்டுத் திருந்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டாரா என்ற பிரச்சினை பின்பு எழாதவாறு தொடர்ந்து செய்வாராயின் அவரது வேலை உறுதிப்பாட்டைத் தடைசெய்யக்கூடியதான ஏதேனும் பாரிய செயலுக்காக அல்லது தவறுக்காக அல்லது மோசடியான நடத்தைக்காக அல்லது பண்புக்காக ஏதாவது கடிந்துரை வழங்கப்பட்டிருந்தால் அதை அந்த உத்தியோகத்தருக்கு அறிவித்து அதை அவர் பெற்றமை குறித்த அவரது கையொப்பத்தையும் பெறல் வேண்டும். அவ்வாறு செய்ய வேண்டியது அலுவலர்களின் தவறுகளை முற்கூட்டியே அறிவித்து அக்குறைபாடுகளை நீக்க அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது என்பது பற்றிப் பின்னர் சிக்கல் ஏதும் ஏற்படுவதற்கு இடமளிக்காதிருப்பதாகும்.

(அ) இந்த உரைப் பகுதியின் நோக்கம் யாது?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(ஆ) இந்த உரைப்பகுதியில் தகுதிகூர் நிலையிலுள்ள உத்தியோகத்தர்கள் மீது கருணை காட்டப்படுகிறது. இதை உறுதிப்படுத்தும் உதாரணம் **ஒன்றைக்** குறிப்பிடுக.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(இ) தகுதிகூர் நிலை கொண்டதாக நியமனத்தை வழங்குவதற்கான காரணம் யாது?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

[பக் 6 ஐப் பார்க்க.

(ஈ) உத்தியோகத்தர் ஒருவர், எழுத்து மூலமாக எத்தகைய சந்தர்ப்பத்தில் எச்சரிக்கை செய்யப்படுவார்?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(உ) உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் தொடர்ந்திருப்பதற்கான தகுதியை உறுதிப்படுத்துவதற்கான முன்தேவைகள் யாவை?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

(ii) சுறுசுறுப்பு மிக்க புதிய உலகின் கேள்விகளுடன் இசைந்து செல்லும் பொருட்டு இலங்கையின் உயர் கல்வித் துறையில் மிகப் பெரும் மாற்றமுறும் தன்மையொன்று இடம்பெற்று வருகின்றது. எனவே கல்வித்துறையானது. பாரம்பரிய மாதிரிகளிலிருந்து விலகி எந்நாட்டிற்கும் செல்லக்கூடிய தொழிற்படையொன்றினை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்ற ஊழியர்களின் தேவையுடன் இணைக்கின்றதொரு விதத்தில் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமையொன்றிற்கு மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது. உயர் கல்விக்கான கேள்வியுடன் இணைந்து செல்வதற்கு அரசாங்கத்தினால் மாத்திரம் முடியாததாகையால் உயர் கல்வியில் அரசின் தனியுரிமை பாரிய அழுத்தங்களுக்கு உட்படுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது. மேலும், மாணவர்கள் எதிர்பார்க்கும் கல்வியின் தரத்திற்கும் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் தரங்களுக்குமிடையே இடைவெளி உருவாகிறது. இதனை கிடைக்கத்தக்க வளங்களின் மூலம் நிரப்புவது இடர்ப்பாடானதாகும். ஆகவே, இலங்கைப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பாடநெறிகளைப் பன்முகப்படுத்தப்படுவது அவசியமாகவுள்ள வேளையில் உலக சந்தையின் உச்சநிலையினை மாணவர்கள் அடைவதற்கு மாணவர்கள் வெளிப்படுத்த வேண்டிய தேர்ச்சி மட்டத்தினை விரிவாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. உயர் கல்வியில் அரசின் ஏகபோகத்தினைக் குறைக்கும் நோக்குடன் விசேட தகைமைக்காக அரசாங்கமும் தனியார் துறையும் ஒன்றுடன் மற்றொன்று போட்டியிடும் தன்மை கொண்ட முறைமை சார்ந்த இரு அடுக்கு முறைமையொன்றினை நோக்கி நகர்வது பொருத்தமானதாகும்.

(அ) இந்த உரைப்பகுதியின் அடிப்படை நோக்கத்தை குறிப்பிடுக.

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(ஆ) உயர் கல்வித்துறை சார்ந்ததாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இரு அடுக்கு முறைமை என்பதால் கருதப்படுவது யாது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

[பக் 7 ஐப் பார்க்க.

(இ) மாணவர் எதிர்பார்க்கும் கல்வியின் தரத்துக்கும் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் கல்வியின் தரத்துக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு இந்த உரையாசிரியர் தெரிவிக்கும் வழிமுறை யாது?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(ஈ) பாரம்பரிய மாதிரிகளிலிருந்து விலகி தேர்ச்சி மட்டக் கல்வி முறைமையாக கல்வி மாற்றமடைவதற்கான நோக்கம் யாது?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(உ) இந்த உரையாசிரியர் உயர்கல்வியில் அரசின் தனியுரிமை பாரிய அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதென ஏன் குறிப்பிடுகிறார்?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் வெளிநாட்டுத் துறை வெளிநாட்டு அதிர்வுகளுக்கான அதன் தாக்குபிடிக்கும் தன்மையினை அதிகரிப்பதற்காக 2014 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் மேலும் வலுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சாதகமான தோற்றப்பாட்டிற்கு உலகளாவிய பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் மீட்சியும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட மேம்பட்ட வளர்ச்சி வாய்ப்பும் ஆதரவளிக்கும். வணிகப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக இலக்கிடப்பட்ட வழிமுறைகள் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதுடன் சேர்ந்து வர்த்தகப் பற்றாக்குறையினை கணிசமானமளவிற்குக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பாரிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களிலிருந்து குறிப்பாக சுற்றுலா துறைமுகம் மற்றும் வானூர்திநிலையம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் வெளிமூலங்களிலிருந்தான வியாபாரப் பணிகள் ஆகியவற்றின் மூலம் நாட்டின் பொருளாதார மையங்கள் பெருமளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுமென்பதனால் சேவைகள் ஏற்றுமதிகள் நடுத்தர காலத்தில் விரைந்து வேகத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. புலம்பெயர் தொழிலாளர் சேர்கையினை பன்முகப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணவனுப்பல்களை அதிகரிப்பதற்குக் காரணமாவதுடன் அந்த பணவனுப்பல்கள் இலங்கையின் வெளிநாட்டுச் செலவாணியின் வலுவான மூலமாக நடுத்தரக்காலத்தில் தொடந்தும் இருக்கும்.

(அ) வெளிநாட்டு செலாவணியின் வலுவான மூலமாக இலங்கையில் கருதப்படும் பணவனுப்பல் முறைகள் யாவை?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(ஆ) நடுத்தர காலத்தில், சேவை ஏற்றுமதிகளின் விரைந்த வேகத்திலான வளர்ச்சி எந்த நடைமுறைகளினூடாக நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(இ) நன்மைகளை ஈட்டித்தரும் பாரிய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு உரிய துறைகள் யாவை?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(ஈ) இலங்கையின் வெளிநாட்டுத் துறையின் சாதகமான தோற்றப்பாட்டை உறுதிப்படுத்தும் காரணிகள் யாவை?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(உ) எந்த நடவடிக்கைகள் மூலமாக வர்த்தகப் பற்றாக்குறை கணிசமான அளவு குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

* * *